





श्रीमत् वेदान्त रामानुज मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् श्रीवास योगीश्वर गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रीरङ्गनाताह्वय मुनिकृपया प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् वेदान्त रामनुज मुनिमपरम् संश्रये देशिकेन्द्रम्



श्रीमत् श्रीवास योगीश्वर मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् वेदान्त रामानुज गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रुत्यन्त रामानुज यति नृपतेः प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् श्रीवास रामनुजमुनिं संश्रये ज्ञानवार्धिम्



वेदान्त लक्ष्मण मुनीन्द्र कृपात्त बोधम्
तत्पाद युग्म सरसीरुह भृङ्गराजम्
त्रय्यन्त युग्म कृतभूरि परिश्रमं तं
श्रीरङ्ग लक्ष्मणमुनिम् शरणं प्रपद्ये

# கண்ணிநுண் சிறுத்தாம்பு

kaNNin-uN siruththAmbu

# கண்ணிநுண் சிறுத்தாம்பு

தனியன்

**ஸ்ரீ நாதமுனிகள் அருளிச்செய்த**

अविदित विषयान्तरः शठारेः उपनिषदाम् उपगान मात्रभोगः।

अपि च गुणवशात् तदेकशेषी मधुरकविर्हृदये ममाविरस्तु॥

வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ்செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர்
ஏரெங்கள் வாழ்வாம் என்றேத்தும்
மதுரகவியார் எம்மை ஆள்வார் அவரே அரண்

**ஸ்ரீ மதுரகவி ஆழ்வார் அருளிச்செய்த**

***கண்ணி நுண்சிறுத் தாம்பினால் - கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன் என்னப்பனில்***
***நண்ணித் தென்குருகூர் - நம்பி என்றக்கால்***
***அண்ணிக்கும் அமுதூறும் - என்நாவுக்கே*** [1] [0937]

நாவினால் நவிற்று - இன்பம் எய்தினேன்
மேவினேன் - அவன் பொன்னடி மெய்ம்மையே
தேவு மற்றறியேன் - குருகூர் நம்பி
பாவின் இன்னிசை - பாடித் திரிவனே [2] [0938]

திரிதந்தாகிலும் - தேவபிரான் உடை
கரிய கோலத் - திருவுருக் காண்பன் நான்
பெரிய வண்குருகூர் - நகர் நம்பிக்காள் உரியனாய்
அடியேன் - பெற்ற நன்மையே [3] [0939]

நன்மையால் மிக்க - நான்மறை ஆளர்கள்
புன்மை ஆகக் - கருதுவர் ஆதலில்
அன்னையாய் அத்தனாய் - என்னை ஆண்டிடும் தன்மையான்
சடகோபன் - என் நம்பியே [4] [0940]

## கண்ணிநுண் சிறுத்தாம்பு

நம்பினேன் - பிறர் நன்பொருள் தன்னையும்
நம்பினேன் - மட வாரையும் முன்னெல்லாம்
செம்பொன் மாடத் - திருக்குருகூர் நம்பிக்கு அன்பனாய்
அடியேன் - சதிர்த்தேன் இன்றே [5] [0941]

இன்று தொட்டும் - எழுமையும் எம்பிரான்
நின்று தன்புகழ் - ஏத்த அருளினான்
குன்ற மாடத் - திருக்குருகூர் நம்பி
என்றும் என்னை - இகழ்விலன் காண்மினே [6] [0942]

கண்டு கொண்டென்னைக் - காரி மாறப்பிரான்
பண்டை வல்வினை - பாற்றி அருளினான்
எண்டிசையும் - அறிய இயம்புகேன்
ஒண்டமிழ் - சடகோபன் அருளையே [7] [0943]

அருள் கொண்டாடும் - அடியவர் இன்புற
அருளினான் - அவ்வருமறையின் பொருள்
அருள் கொண்டு - ஆயிரம் இன்தமிழ் பாடினான்
அருள் கண்டீர் - இவ்வுலகினில் மிக்கதே [8] [0944]

மிக்க வேதியர் - வேதத்தின் உட்பொருள்
நிற்கப் பாடி - என் நெஞ்சுள் நிறுத்தினான்
தக்க சீர்ச் - சடகோபன் என் நம்பிக்கு
ஆட்புக்க காதல் - அடிமைப் பயனன்றே [9] [0945]

*பயன் அன்றாகிலும் - பாங்கலர் ஆகிலும்*
*செயல் நன்றாகத் - திருத்திப் பணிகொள்வான்*
*குயில் நின்றார் பொழில் சூழ் - குருகூர் நம்பி*
*முயல்கின்றேன் - உந்தன் மொய் கழற்கு அன்பையே* [10] [0946]

*அன்பன் தன்னை - அடைந்தவர்கட்கு எல்லாம் அன்பன்*
*தென் குருகூர் - நகர் நம்பிக்கு*
*அன்பனாய் - மதுரகவி சொன்ன சொல்*
*நம்புவார் பதி - வைகுந்தம் காண்மினே* [11] [0947]

# கண்ணிநுண் சிறுத்தாம்பு

கண்ணி நுண்சிறுத் தாம்பினால் - கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன்
என்னப்பனில்
நண்ணித் தென்குருகூர் - நம்பி என்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் - என்நாவுக்கே [1] [0937]